IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.399/2023

DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | MURUGAVEL |
| FATHER'S NAME | : | MUNISAMY |
| VILLAGE | : | MELPATTI |
| OCCUPATION | : | SI |
| AGE | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 25th day of February 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது மேல்பட்டி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். எங்கள் காவல் நிலையத்தில் கடந்த 2018ஆம் வருடம் உதவி ஆய்வாளராக திரு.சிலம்பரசன் அவர்கள் பணிசெய்த விவரம் எனக்கு தெரியும். அவர்கள் தற்போது பணிமாறுதலில் சென்றுவிட்டதாலும், அவர்களுடைய கையொப்பம் எனக்கு பரிட்சயம் என்பதாலும், நான் ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 19.05.2018 அன்று காலை 11.00 மணியளவில் இவ்வழக்கின் முதல்நிலை புலன் விசாரணை அதிகாரி திரு.சிலம்பரசன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது லட்சுமி, க/பெ.கோவிந்தசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண்.82/2018 இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(1) என முதல் தகவல் அறிக்கை பதிவு அதன் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவை இணைத்து கணம் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை மேலதிகாரிகளின் பார்வைக்கு வைத்தும், விசாரணை நகலை அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்.

அன்றைய தினமே மதியம் 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று விசாரணை செய்து சாட்சிகள் ரவி மற்றும் பழனி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளின் கையொப்பம் பெற்றார். பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் உடைந்த செங்கல் ஒன்றை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். பின்னர் கைப்பற்றிய வழக்கு சொத்தை படிவம் 91–ன் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தார். பின்னர் சாட்சிகள் லட்சுமி, கிஷோர், கோவிந்தசாமி, முருகன், ரவி மற்றும் பழனி ஆகியோரை தனித்தனியாக விசாரணை

செய்து வாக்குமூலங்களை பதிவு செய்தார். சாட்சிகளின் விசாரணையில் இருந்து சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் எதிரியைத் தேடி வந்த நிலையில் எதிரி முன்பிணை பெற்றதால் கைது நடவடிக்கை இல்லை. பின்பு அ.சா.2க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அருணா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்துபதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் பெற்றார்.

புகார் மனு அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும், கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ. 6 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ. 7 ஆகவும், அ.சா.2 ற்கு வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயசான்றிதழ் அ.சா.ஆ.8 ஆகவும், கைப்பற்றிய வழக்கு சொத்து சா.பொ.1 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் அவரது புலன் விசாரணை முடித்து எதிரி மீது மேலே கண்ட பிரிவுகளின் கீழ் குற்ற அறிக்கையை தாக்கல் செய்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் சொன்னபடி வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சொன்னபடி சொன்ன நேரத்தில் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்யவில்லை என்றாலும் சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் நான் சொன்னபடி வழக்கு சொத்து கைப்பற்றப்படவில்லை என்றாலும், சொன்னபடி சொன்னவிதத்தில் எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

Sd/–R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.